ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

கேள்வி:—எல்லோரும் தன் ஸ்வரூபமாகவே ஆகி ஆனந்தரூபர்களாயிருக்கவேண்டுமென்று பரமேசுவரன் ஸங்கற்பித்ததற்கு நேர் விபரீதமாக பெரும்பாலும் பிராணிகள் ஸம்சாரத்திலேயே கட்டுண்டு கஷ்டப்படுகிறார்களேயன்றி ஞானமார்க்கத்தையடைந்து சுகப்படுவதில்லையே! கஷ்டமென்று தெரிந்துகொண்டே பந்தத்திற்காளாகிறார்களே. குழியென்று தெரிந்துகொண்டே எவனாவது விழுவானா? அப்படியாவதற்கோர் காரணமிருக்கவேண்டும். அதென்ன?

பதில்.—கண்ணுள்ளவனல்லவா இது குழியென்றும் விழுந்தால் கஷ்டம் வருமென்றும் அறிவான். குருடன் குழியென்று எப்படி அறிவான். தெரியாமையால் விழுந்து விடுகிறான். பிறகு கஷ்டப்படுகிறான். அது போலவே ஞானக்கண்ணுள்ளவனல்லவா ஸம்சாரம் பந்தகமென்று தெரிந்துகொண்டு விலகுவான், அக்ஞான இருளால் மயங்கி நிற்பவன் இவ்வுண்மையை எப்படி அறியக்கூடும். அன்றியும் தெரிந்துகொண்டவனையும், விழுந்து கஷ்டப்படக்கூடாதென்று நினைத்திருப்பவனையும் ஒருவன் பலாத்காரமாகப் பிடித்துதள்ளி விடுவானாகில் அவனை நிராகரிக்கச் சக்தியற்றவனாகில் தள்ளுபட்டுவிழுந்து கஷ்டப்படும்படிதான் நேரிடும்.

கேள்வி:—அப்படித்தள்ளிவிடுபவன்போல் ஸம்ஸாரத்தில் தீயதொழிலைச் செய்விப்பது எது?

பதில்:—அதுதான் காமமெனப்படும். அது அதிக வலுவுடையது. அது வந்து ஆக்ரமிக்கவே விவேகியும் இஷ்டப்படாவிடினும் வீழ்த்தப்படுகிறான். அதனாலேவப்பட்டு பாபத்தையும் செய்யத்துணிந்து விடுகிறான். செய்துவிட்டுப்பிறகு கஷ்டப்படுகிறான்.

கேள்வி:—இவ்வாறுவலுத்த காமத்திலீடுபட்டு கஷ்டப்படுவதற்குப் பெரியோர் புத்திசொல்லித் தடுக்கக்கூடாதா? அல்லது ஆக்ஞைசெய்து விலக்கக்கூடாதா?

பதில்:—காமவெறிபிடித்தவன் பெரியோர்பேச்சைக் கேழ்க்கிறானா? பெரியோர் உபதேசிக்காமலில்லை. உதாரணமாகத் தற்காதத்தில் பார்ப்போம். பிரௌடா விவாஹம்: விதவாவிவாஹம் முதலியவைகளில் கணக்கிலடங்காக்கெடுதலுண்டென்று சாஸ்திர சித்தாந்தத்தை ஆராய்ந்து அனுபவத்தையும்காட்டி மஹாஸபைகளில் உபதேசிக்கின்றார்களே. அதைக்கேழ்க்கின்றார்களா? காமவெறியால்கைம்பெண்ணை மணம்புரியக்கருதுகிறார்களேயன்றிக் கடவுளிட்ட சட்டத்தைக்கனவிலாவது நினைக்கிறார்களா? பகவான் கீதையில்— "என் நிக்கிரஹம் என்னசெய்யப்போகிறது" என்கிறார். ஆகவே பெரும்பாலோர் அவித்தையிலும் காமத்திலுமகப்பட்டுக் கஷ்டப்படுகிறார்களேயன்றி சுகமடைய வழி தேடுவதில்லை. விவேகிகள் அவ்வழிசெல்லாமல் நல்வழி நாடுவார்களாக.

பத்திராதிபர்.

# 7. கார்ப்பண்யமில்லாமை.

ஆத்துமகுணங்களுள் 7-வது கார்ப்பண்யமில்லாமையாகும். அதன் சொரூபத்தை பிருஹஸ்பதிபகவான்

स्तोकादपि हि दातव्यं मुदितेनान्तरात्मना ।
अहन्यहनि यत्किंचि दकार्पण्यं हि तत् स्मृतम् ॥

"சொத்து ஸ்வல்பமாயிருந்தாலும் அதிலிருந்து கொஞ்சமாவது கொடுக்கவேண்டும். மனஸ் ஸந்தோஷத்துடன் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு தினத்திலும் கொடுக்கவேண்டும். இதுவே கார்ப்பண்யமில்லாமையெனப்படும்" என்று கூறியுள்ளார். அளவற்ற சொத்தையடைந்திருந்தாலும் யோக்கியர்களிடம் அதை அர்ப்பணம் செய்ய மனம் வாராது. நல்ல காரியங்களிலும் விநியோகப் படுத்த விவேகிகளுக்கும் சித்தம் துணியாது. மேலுக்குமேல் சேர்த்தே வைக்கவேணுமென்று தோன்றுமேயன்றி கொடுக்கத் தோன்றாது இது லோபத்தாலேற்படுவது. இதுமனுஷ்யர்களுக்கு ஸஹஜமாயுள்ளது. அதனாற்றான் சுருதி மனுஷ்யர்களுக்கு தானத்தை விதிக்கின்றது. ஒருவாறுதாக்ஷிண்யத்தாலோநிர்பந்தத்தாலோ கொடுத்தேதீரவேண்டியதாகநேருமானால் மிகவருத்தப்பட்டுமனக் களிப்பில்லாமல் வேறு கதியில்லையேயென்று கொடுப்பார்கள். திருடனுக்கோ, அரசனுக்கோ ராஜாங்கவேலைக்காரர்களுக்கோ பயந்து சிலர் கொடுப்பார்கள். உயிர்போவதானாலும் சிலர் கொடுக்கத்துணியார். பணத்தின் பெருமையையும் அருமையையும்பற்றி பலவாறாகப்பேசிக் கார்ப்பண்யத்தையே கைக்கொள்ளத் தக்கதென கண்யமாகப் பேசுவார்கள். இவ்வாறு தேடிய பொருளைக் கணப்பொழுதில் கணக்கில்லாமல் கண்டபடி வாரி இறைத்துவிடுவார்கள். நல்ல கார்யமென்று நினைப்பூட்டினாலும் நிந்திப்பார்களேயன்றி ஆநந்திக்கமாட்டார்கள். அப்படியில்லாமல் சொத்து ஸ்வல்

மானாலும் அதிலிருந்துகொஞ்சமாவது கொடுக்கவேண்டுமென்று நினைக்கவேண்டும். கொடுப்பதையும் சந்தோஷமாகக் கொடுக்க வேணும், மனம் வருந்தி கொடுக்கக்கூடாது, ஒவ்வொரு தினத்திலும் கொடுக்கவேண்டும். ஜன்மமத்தியில் ஒரு தினத்தில் தானம் செய்திடுவோமென்றுநினைத்திருக்கக்கூடாது. கற்பதிலும்கொடுப்பதிலும் மை குறைவதையும் கரையான்புற்றுவளர்வதையுமுவமையாகப்பார்த்துக்கொண்டு நாடோறும் விடாமல் கற்கவேண்டும். கொடுக்கவேண்டும். அங்ஙனமே நீதிநூல்

अञ्जनस्य क्षयं दृष्ट्वा वल्मीकस्य तु सञ्चयम् ।
अशून्यं दिवसंकुर्याद्दानाध्ययनकर्मसु ॥

“மைக்கூண்டில் நிறம்ப அடைத்துவைத்த மையை தினந்தோறும் கொஞ்சங்கொஞ்சமாக எடுத்தாலும் நாளடைவில் குறைந்துவிடுகிறது. கரையான் தன் வாயீரங்கொண்டு கடுகளவிற்கும் குறைவாகக் கொண்டுவந்து குவித்த புற்று நாளடைவில் பெரிதாய் வளர்ந்துவிடுகிறது. இதுபோலவே தினந்தோறும் ஸ்வல்பம் ஸ்வல்பமாகக் கொடுத்தபோதிலும் நெடுநாளாகும்பொழுது மலைபோல் குவிந்துவிடும். இங்கு கொடுத்துவைத்ததுதான் மறுபிறவியில் கிடைக்கும். இப்பிறவியில் ஒன்றும் கிடைக்காமல் கஷ்டப்படுபவோர் முப்பிறவியில் கொஞ்சமும் கொடுத்திருக்கமாட்டார்கள். அதனாற்றான் தாரித்திரியகஷ்டத்தையனுபவிக்கிறார்களென்று சாஸ்திரம் கூறுகின்றது. அன்றியும் லோபித்தனமென்பது நாகத்திற்கு வாசற்படியென பகவான் கூறுகின்றார். ஆகையால் அந்த லோபத்திற்கு வசப்பட்டுபாக்யவசத்தால் பிறப்புமுதற்கொண்டே கிடைத்ததாயிருந்தாலும், அல்லது புருஷகாரத்தால் தற்போது கிடைத்ததாயிருந்தாலும் ஸ்வல்பமாயிருந்தாலும்அதிகமாயிருந்தாலும் சக்திக்குத்தக்கவாறு சந்தோஷமாகத்தினந்தோறும் தானம் செய்து யாவரும் இஹத்திலும் நல்ல கீர்த்தியையடைந்து பரத்திலும் பெரும் பாக்யவான்களாகிப் பேரானந்தம் பெறுவாராக.

---

பத்திராதிபர்.

# இது பெரியாரின் பெருமைக்கழகா ?

अनादिसिद्धागममूलके मतेऽप्यवैदिकत्वप्रतिपादनाय च ।
सधैर्यमारम्भकृते महामते कले नमस्ते कुशली चिरं भव ॥

ஒரு குடும்பத்திற்கோ, ஒரு கிராமத்திற்கோ, ஒரு நகரத்திற்கோ அல்லது பல ஜனங்களுக்கோ எஜமானராகவோ ஆசார்யராகவோ இருக்குமொருவர் தம் மனம்போனபடியெல்லாம் பேசாமல் ஒவ்வொரு விஷயத்தையும் மிகவும் ஆலோசித்தே பேசவேண்டும். அவ்விதமின்றி தோன்றியவாறு ஒன்றையும் கவனியாமல் தம்மபிப்பிராயத்தை வெளியிட்டால் அவர்களைச் சார்ந்த பலரும் அதையனுஷ்டிக்க முயலுவார்கள். அது ஸரியான விஷயமாயிருந்தால் எல்லா ஜனங்களுக்கும் சிரேயஸ்ஸையளிக்கும். மாறுதலாயிருந்தால் அதற்குற்ற பலனே கிடைக்கும். இக்கருத்தையே यद्यदाचरतिश्रेष्ठः என்று கீதாசார்யாளும் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதமிருக்க தற்காலம் அநேகம் சீடர்களுக்கு ஆசார்யபாவத்தை வகித்துச் சிறந்த தத்வோபதேசம் செய்யும் ஒரு ஆசார்யார் நன்ஜன்கூடு மகா-ள-ள-ஸ்ரீ ரங்கண்ணு அவர்களுக்கு அத்வைதமதம் அவைதிகம் என்பது முதலான விஷயங்களுடன் கூடிய ஒரு பத்திரிகையை அனுப்பியதாகவும் ஷை ரங்கண்ணு அவர்கள் மைசூர் ராஜதானியில் வியாபகாள்ளான பல பண்டிதர்களிடம் இவ்விஷயத்தையறிவித்து அவர்களெல்லாரும் சேர்ந்து இதின் கண்டனத்திற்காக ஒரு மஹாஸபை கூட்டப் பிரயத்தினம் செய்துகொண்டிருப்பதாகத் தெரிகின்றது. மதமென்பது பலவிதப் பிரிவுகளையடைந்திருப்பினும் இத்தென்னிந்தியாவில் அதிலும் வைதிகர்களான ஆஸ்திகர்களுக்குள் பிரதானமாய் விளங்குவது துவைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் எனப் பெயர்வாய்ந்த மூன்று மதங்களே. இம்மூன்றுகளுக்குள் ஒவ்வொன்றிலும் விசேஷப்பற்றுதலையடைந்த ஜனங்கள் பலர் இருக்கின்றார்களென்பதும் வெளிப்படையே. அந்தந்த மதத்தில் அபிமானமுள்ளவர்கள் ஆதியில்பகவதம்சாவதாரபூதர்களானமஹான்களே லோகக்ஷேமத்தின்பொருட்டு ஜகதாசார்யாளாகத்தோன்றி அந்தந்த மதத்தையும் ஸ்தாபனம் செய்திருக்கிறார்களென்றும் அவைகள் வைதிகமதங்களென்றும் ஸித்தாந்தமாகக் கூறுகின்றார்

கள். இந்த மதங்களுடைய ஆதிஆசார்யாளேயும் அவர்களுடைய மகிமையையும், ஞானபலத்தையும், கருணையையும் லோகோபகார சிந்தையையும், தர்மஸ்தாபனத்தில் அவர்களுக்கிருந்த ஊக்கத்தையும் பக்ஷபாதமில்லாமல் நடுநிலைமையிலிருந்து ஒருவர் கவனித்தால் பகவதவதாரபூதாளான மஹாபுருஷர்களென்றே சொல்லலாம். லோகக்ஷேமத்தையே முக்யமாகக்கருதி யாதொரு பிரதிப்ரயோஜனத்தை எதிர்பாராமல் எவ்விதமாகிலும் உத்தமமான வழியைக் காட்டி ஸகல ஜனங்களேயும் இக்கொடிய ஸம்ஸாரதுக்கத்திலிருந்தும் விடுவிக்கவேண்டுமென்று இயற்கையான கருணையுடன் அவரவர்களும் அனுதியாய் விளங்கும் வேதங்களேயே மூலப்பிரமாணமாகக்கொண்டு வெளியிட்டிருக்கும் மதங்களில் ஒரு மதத்தில் தமக்கிருக்கும் அபிமானத்தால் பெரிய ஸ்தானத்திலிருக்கிறவர்கள் மற்றொன்றை அவைதிகம் (அதாவது இது வேதப்பிரமாணத்தை மூலமாகக்கொண்டதல்ல)என்று எங்ஙனம் கூறத்துணிந்தார்களோ, வைதிகமதங்களுக்குள் முதன்மையாய் விளங்கும் அத்வைதமதத்தை ஸ்தாபனம் செய்த ஸ்ரீ பரமேசுவரமூர்த்தியின் அவதாரரூபாளான ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யாள் பரமவைதிகோத்தமசிகாமணிகளென்றும் அறிவே அவனியில் மானிடவுருவாய்த் தோன்றிய மூர்த்தியென்றும் மறைகளின் தத்வார்த்தங்களே அக்ஞானிகளுக்குபதேசித்துப் பிறவிப்பிணியைப் போக்க வேண்டுமென்று இப்புவியிலவதரித்த கருணைக்கடலென்றும் மேனுட்டிலுள்ள புறமதஸ்தர்களான மேதாவிகள் தங்கள் நூல்களில் வெளியிட்டிருக்கிறுர்கள். இன்றைக்கும் அவர்களுடைய ஞானுதிசயத்தைப் போற்றுகிறவர்கள் பலருண்டு.

பின்னும் இம்மஹான் வேதங்களெனப் பெயர்பெற்ற கடலேக்கடைந்து அதிலிருந்தும் ஸாரார்த்தமான அத்வைதமென்கிற அமுதத்தைப்பெற்று அதை ஸகல ஜனங்களேயும் அருந்தும்படி செய்து பவப்பிணியைப்போக்கி என்றுமழிவில்லாத பரமாத்மஸ்வரூபத்தையடைந்து நித்யானந்தரூபிகளாக விளங்கட்டுமெனக் கருதித் தங்களால் வெளியிடப்பட்ட பாஷ்யங்களால் நன்கு அறிவித்திருக்கிறுர்கள்.

அன்றியும் அவர்களாலெழுதப்பட்ட அத்வைதஸூத்ர பாஷ்யத்தில் அத்தியாஸ பாஷ்யத்தின்முடிவில் இப்பொழுது எதற்காக இந்த பாஷ்யம் எழுதப்புகுந்தார் என்று நிகழும் சங்கைக்கு

ஸமாதானமாக ஜீவர்கள் அநாதியான அவித்தை யால்மோகிதர்களாய்க்கொண்டு ஹிதாஹிதத்தையறியாமலும் நித்யா நித்யவிவேகமில்லாமலும் துக்கத்தைக் கொடுக்கும் ஸாதனங்களை ஸுகஸாதனங்களாகவும் சுகத்திற்கு ஸாதன மாயிருப்பதை துக்கஸாதனமென்றும் எண்ணி பிரமத்தால் அஸத்தியமான இப்பிரபஞ்சத்தில் ஸத்தியபுத்தியையும் ஸத்யவஸ்துவான பரமாத்மாவிடத்தில் அஸத்தியபுத்தியும் தேகம் முதலானவைகளில் நித்யபுத்தியும் ஏற்பட்டு அநாதிகாலமாய் வந் திருக்கும் இந்த அத்தியாஸமானது மித்தியாஞானரூபமாயிருந்து கொண்டு ஸகல அனர்த்தங்களையுமுண்டுபண்ணுகிறதென்று எல் லோராலும் நன்கறியப்பட்ட விஷயம். இவ்விதம் ஸகல கஷ்டங் களுக்குமிருப்பிடமான இந்த அக்ஞானத்தின் நிவிருத்தியின் பொருட்டு ஜீவாத்மபரமாத்மாக்களுக்கு ஐக்கியத்தைப்போதிக்கும் சாஸ்திரார்த்தங்களையறிவிக்கவேண்டி ஸகல வேதாந்தசாஸ்திரங்க ளுடைய ஆரம்பமும் செய்யப்படுகின்றது. இந்த அபிப்பிராயத் தையே சுருதிகளின் ஸாரபூதங்களான ஸகல உபநிடதங்களும் வெளியிடுகின்றனவென்பதையே இந்த சாரீரகமீமாம்ஸாசாஸ்தி ரத்தால் அறிவிக்கிறோம் என்றும் பிரதிக்ஞை செய்துகொண்டு தான் பிறகு எழுதுகின்றார்கள். இதனால் வேதஸாரங்களான உப நிஷத்துக்களையே முக்ய ஆதாரமாகக்கொண்டு தம்மால் அத்வைத பாஷ்யமெழுதப்படுகிறதென்றும் உபநிஷத்துக்களின் உண்மை யான பொருளைக் கவனித்தால் அத்வைதமதமே வைதிகமதமென் றும் சிறந்ததென்றும் அத்வைதமதாசார்யாளின் அபிப்பிராய மென்று நன்கு விளங்கவில்லையா? இவ்விதம் ஸ்பஷ்டமாய் மூலா சார்யர்களால் வேதமூலமாகவே அத்வைதமதத்தைஸ்தாபிக்கிறே னென்று பிரதிக்ஞை செய்துகொண்டு தொடங்கிய விஷயத்தை அற்பமும் கவனியாமல் அவைதிகமெனச் சாற்றிச் சான்றோர் உள்ளத்திற்குக் கலக்கத்தையுண்டுபண்ணி ஆனந்திப்பது அறிஞர் களின் செய்கையாகுமா?

வைதிகசிரோரத்னமாய் விளங்கும் ஒரு மதத்தைக் குறை கூறவேண்டியா பல மடங்களைப் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அந்தந்த ஆசார்யர்களால் ஸ்தாபனம் செய்யப்பட்ட மதஸித்தாந்தத்தை சீடர்களுக்குபதேசித்து அந்த தத்வத்தை அவர்களை கிரகிக்கும்படிசெய்தால் அதனால் அவர்கள் அக்ஞானம்

விலகி நற்கதியடையமாட்டார்களா? அன்யமதத்தைக் குறைகூற ஏன் முன்வரவேண்டும்? எவர்கள் எந்தமாதிரி தூஷணை செய்தாலும் அந்தந்த மதத்தின் உண்மையை மாற்ற எங்ஙனம் ஸாத்தியமாகும்? நம்மைப்போல் அந்தந்தமதங்களில் அபிமானங்கொண்டவர்களும் அவரவர்கள் ஆசார்யாளுடைய ஸித்தாந்தத்தை யங்கீகரித்தவர்களும் சிறந்த ஞானத்தாலும் குணங்களாலும் பலாலும் போற்றக்கூடிய மகிமைபெற்ற மஹான்களான அநேகம் மடாதிபதிகளும் பண்டிதசிகாமணிகளான அவரவர்களுடைய சிஷ்யகோடிகளும் ஆங்காங்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்களே! மடாதிபதிகள் நேரில் வராவிட்டாலும் சிறந்த சிஷ்யர்கள் மூலம் இந்த துர்வாதத்தை ஏன் கண்டிக்கமாட்டார்கள்? இந்த வாதம் எப்படி நிலைபெறும் என்கிற தோற்றம் இவர்களுக்கு ஏன் உண்டாகவில்லையோ? அப்படி வந்தாலும் புறமதஸ்தர்கள் வாதப்போரில் நம்மை வெல்லமுடியாதென்று எப்படி இவர்கள் அகங்காரப்படலாம்? புறமதங்களில் இவர்களுக்கு சமமாகவோ மேலாகவோ ஒரு பண்டிதருமில்லை என்று எப்படிக் கூறமுடியும்? இருகக்ஷியாருக்கும் வாதம் நேர்ந்தால் 'சுருதிவாக்கியங்களுக்கு அவரவர்கள் மதஸித்தாந்தத்தைஅநுஸரித்து தாங்கள் கூறும் பொருள் தான் ஸரியென்று ஒருவருக்கொருவர் மாறுதலான கருத்தை வெளியிட்டு தங்கள்தங்கள் ஆசார்யாளின் வாக்கியங்களையும் மேற்கோளாகக் காட்டினால் இதுதான் ஸரியான பொருள். இது தவறென்று எங்ஙனம் தீர்மானம் செய்யமுடியும்? சுருதிகளுக்கு எல்லா ஆசார்யாளும் ஒரேவிதமான கருத்து கொண்டிருந்தால் மதபேதமே ஏற்பட நியாயமில்லை. எல்லா அதிகாரிகளையும் எப்படியாவது நல்வழியில் கொண்டுவந்து க்ஷேமத்தையடையும்படி செய்யவேண்டுமென்று முன்வந்த மதாசார்யாள் தாம் எடுத்துக்கொண்ட ஸித்தாந்தத்திற்குஸாதகமாக சுருதிகளைக்காட்டி அவைகளுக்கு கௌணமாகவும் சிலவிடங்களில்பொருள்கூறியிருக்கலாம் அந்த ஸித்தாந்தத்தையநுஷ்டிக்கும் அதிகாரிகள் அதைப் பிரமாணமாகக் கொள்வது உசிதமே. கௌணமாகப் பொருள் கூறப்பட்ட சுருதிவாக்கியங்களுக்கு மற்றொரு ஆசார்யாள் முக்யமான வேறு கருத்தைக் கூறி தம் ஸித்தாந்தத்திற்கு ஆதாரமாகக் காட்டியிருந்தால் இதைத் தவறென்று எப்படிக் கூறமுடியும்? ஆகையால் சுருதிகளின் தாத்பர்யம் எவ்விதமிருக்கென்று விசாரிக்கப் புகுந்தால் இருகக்ஷியாரும் அவரவர்கள் கூறுவதுதான் சுருதியின்

கருத்தென்று சொல்லுவார்கள். ஒருவிதமும் நிர்ணயமாகாமல் வீண்கலகத்தோடுதான் ஸபை முடிவடையும். இதற்கு மத்தியஸ்தர்கள் கிடைப்பதும் சிரமம். இதற்கு வருகிறவர்கள் ஒருமதத்திலும் பற்றுதலில்லாதவர்களாயிருக்கவேண்டும். நாஸ்திகர்கள்தான் வேண்டும், அவர்களுக்கு சுருதி என்கிற சப்தத்தைக்கூட கேட்க அதிகாரமில்லை. நடுநிலைமை வகிக்க ஒருகாலும் அவர்கள் அருகர்களாகமாட்டார்கள். ஆகையால் துவைதிகள் அத்வைதமதத்தை அவைதிகம் என்று கூறினால் அத்வைதிகளும் திரும்பி இந்தப் பாட்டையே பாடி பேபர்களுக்கும் எழுதிவிடுவார்கள். இதனால் எந்த மதத்திற்கு யாது பெருமை ஏற்பட்டதென்பதை அறிஞர்கள் உற்றுநோக்கவேண்டும். இவ்விதம் இதர மதங்களை இகழ்ச்சியாகப்பேச முன்வந்தால் அவ்விதம் வருகிறவருடைய பெருமைக்குச் சிறுமையேற்படுவதைத்தவிர வேறு யாதொரு பயனும் அற்பங்கூடக் கிட்டாதென்பது திண்ணம்.

இக்காலத்தில் கலியின் தாண்டவத்தால் வைதிகமதத்திற்கும் ஸநாதனதர்மத்திற்கும் ஆணிவேராய் விளங்கும் அந்தந்த வர்ணாசிரமதர்மங்கள் பல துரைகளிலும் பீடிக்கப்பட்டுப் படும் கஷ்டங்களையறியாதார் யாருமிலர். ஸ்திரீகளுக்கு 14-வயதுக்குப்பிறகுதான் விவாகம் செய்யவேண்டுமென்று சிலர் கவர்ன்மெண்டுமூலம் வற்புறுத்துகிறார்கள். இக்காலத்தில் இந்தமாதிரி விவாகம் செய்தால் தாயாரும் குழந்தையுமாகச் செய்யும்படி நேரும். ருதுவாகாமல் விவாகம் நடப்பது மிகவும் சிரமம். இந்தமாதிரி விவாகத்தாலேற்படும் தம்பதிகளால் நம்வைதிகதர்மம் எவ்வளவு செழிப்பைப் பெறுமென்பதை நான் அறிவிக்கவேண்டியதில்லை. மற்றும் சிலர் விதவாவிவாகம் அவச்யமென்றும் அதை ஸ்தாபிப்பதுதான் வைதிகமதஸ்தாபனமென்றும் கருதி அதற்காக ஸபை ஸிகிரிடெரி மானேஜர் முதலியவர்களை ஏற்படுத்தி இதுவிஷயமாக வெளியில் போகும் லக்சரர்களுக்கு மீ 30 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரையில் கொடுப்பதாகப் பிரஸித்திசெய்திருக்கிறார்கள். அதுவும் நம் வைதிகமதத்தையடியோடு கெடுப்பதற்கு முக்கியமான காரியம். இவைபோன்ற சொல்லவியலாத பலவித அதர்மங்கள் நம் ஸநாதனதர்மங்களை ஸ்வரூபமேயில்லாமல் நாசம் செய்யக்கிளம்பி ஆங்காங்குஉல்லாஸமாயுலாவுகின்றன. ஸகலஜாதி மத ஆச்ரமங்களுக்கும் அடிப்படையான நம் ஸநாதனதர்மத்திற்கேற்பட்டிருக்கும் இப்

பெரிய ஆபத்தை அடியோடு விலக்கவேண்டியது தர்மஸ்தாபனத்திற்காக ஏற்பட்ட மடங்களில் பீடாதிபத்தியத்தை வகிக்கும் ஆசார்யர்களில் சிலரைப்போல் மற்றுமுள்ளவர்களுக்கும் அவச்யமென்றும் அதற்கு வேண்டிய காரியங்களையே நாம் செய்ய வேண்டுமென்கிற சிரத்தை அதிகம் ஏற்படவில்லை. அவச்யம் கவனிக்கவேண்டிய காரியங்களைக் கவனியாமல் அநாவச்யமான துர்வாதங்களைக் கிளப்பிவிட்டு ஸாதுஜனங்களுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணவேண்டுமென்று பெரியார்களும் முன்வந்துவிட்டால் கலியின் விலாஸத்தைத்தவிர வேறு யாது கூறமுடியும்? ஆகையால் இனியாகிலும் இந்தமாதிரி துர்வாதங்களைக் கிளப்பிக் கலகத்தையுண்டுபண்ணாமல் அவச்யமாய் சீர்திருத்தவேண்டிய பொதுவான ஸநாதனதர்மங்களை ஸரியாய் நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேன்மை பொருந்திய ஸகல மடாதிபதிகளும் எடுத்துக்கொண்டு தங்கள் சிஷ்யர்களுக்கும் கவனிக்கும்படி ஆக்ஞை செய்து அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் இக்காலத்திற்கு மிகவுமுபகாரமாயிருக்குமென்று அநேக வந்தன பூர்வகமாய் விக்ஞாபனம் செய்துகொண்டு இவ்விஷயத்தைப் பூர்த்திசெய்துகொள்ளுகிறேன். சுபம்.

P. K. வைத்யநாதசாஸ்திரி.

---

## வைராக்கியத்தின்விசேஷம்.

(115 பக்கத்தொடர்ச்சி)

ஆறுநாள் இந்த முத்கலருடைய அன்னத்தைப் புசித்துச் சென்றபோதிலும் கொஞ்சமேனும் முகவாட்டத்தையாவது பசியின் கொடுமையையாவது அடையாமல் சந்தோஷமடைந்த மனதுடன் மிக சாந்தகுணமடைந்திருப்பதையும் அவரைப்போலவே அவர் பத்நி புத்திரன் நாட்டுப்பெண் இவர்களும் பொறுமையடைந்திருப்பதைக்கண்டு அந்த துர்வாஸமஹருஷியானவர் ஓய் முத்கலரே! உமது ஜிதேந்திரியத்தன்மையினால் உத்தமமான லோகங்களை அடையப்போகிறீர்.

आहारप्रभवाः प्राणा मनो दुर्निग्रहं चलम् ।
मनसश्चेन्द्रियाणाञ्चाप्यैकाग्र्यं निश्चितं तपः ॥

श्रमेणोपार्जितं त्यक्तुं दुःखं शुद्धेन चेतसा ।
तत्सर्वंभवता साधो यथावदुपपादितम् ॥
प्रीतास्मोऽनुग्रहीताश्च समेत्य भवता सह ।
इन्द्रियाभिजयो धैर्य संविभागो दम श्शमः ॥
दया सत्यञ्च धर्मश्च त्वयि सर्वं प्रतिष्टितम् ।
जितास्ते कर्मभिर्लोकाः प्राप्तोऽसिपरमां गतिम् ॥
अहो दानं विघुष्टन्ते सुमहत्स्वर्गवासिभिः ।
सशरीरोभवान्गन्तास्वर्गंसुचारितव्रत ॥

(இதன் கருத்து) ஆகார நிருடத்தினுல் இந்திரியங்கள் ஸாமர்த்யத்தை அடைகிறதுகள். மனது கட்டுப்படுத்த முடியாதது. எப்பொழுதும் சுழன்றுகொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட மனதையும் இந்திரியங்களையும் ஒற்றுமைப்படுத்துவதே தபமென்று நிச்சயமாகக்கூறப்படுகிறது. அதிகசிரமத்தினுல் சம்பாதிக்கப்பட்ட பொருளை நல்ல மனதுடன் பிறருக்குக்கொடுப்பதென்பது பெருந்துயரத்தை உண்டாக்குவது வழக்கம். ஓ ஸாதுவே உம்மிடத்தில் ஒருவிதமான தோஷமுமில்லாமல் யாவும் பொருத்தமாகவே இருக்கிறது. உம்மையடைந்ததினுலேயே பரமசந்தோஷத்துடன் அனுக்ரஹிக்கப்பட்டவர்களாக ஆய்விட்டோம். இந்திரியங்களை அடக்குவதும் தைரியத்தை அடைவதும் தன்னிடமுள்ள பொருளைச்சக்திக்குத்தக்கபடி சிஷ்டர்களுக்குக்கொடுப்பதும்மனதைக் கட்டுவதும் ஒழிவடைவதும் பிராணிகளிடத்தில் தயவுடனிருப்பதும் உண்மையே பேசுவதும் தர்மத்தைச்செய்வதும் இவைகள் யாவும் உம்மிடம் குடிகொண்டதாக இருக்கிறதுகள். நீர் செய்திருக்கும் புண்யகர்மங்களினுல் உத்தமமான உலகங்களும் உத்தமமான பலன்களும் அடையப்பட்டன. உமது தான விசேஷங்களை தேவர்கள் கொண்டாடுகிறுர்கள். இந்த சரீரத்தோடு நீர் சுவர்க்கம் எாப்போகிறீர்" என்று முனிவர் புகழ்ந்து கொண்டிருக்கையில் தேவலோகத்திலிருந்து இந்திரனுல் அனுப்பப்பட்ட ஒரு விமானத்துடன் தேவதூதன்வந்து ஓ பிராமண சிரேஷ்டரே இந்த விமானத்தில் எருமென்று அழைக்க அந்தமுத்கலரும்தேவதூதரைப்பார்த்து ஓ தேவதூதரே உமதுதேவலோகத்திலுள்ளகுணங்களைப்பற்றிவிசாரிக்கவேண்டுமென்ற ஆவலிருப்பதால் அதைப்பற்றி சொல்வீராக? அங்கு வசிப்பவர்களுக்கு

என்ன குணங்கள் ? என்ன தபம்? என்ன நிச்சயம் ? அவ்விடத்திலுள்ள சுகமென்ன ? தோஷமென்ன? உம்மிடமுள்ள சினேகபாவத்தினால் கேழ்க்கிறேன். அவ்விடத்தில் உண்மையாயிருப்பவைகளையும் பத்தியமாயிருப்பவைகளையும் சந்தேகப்படாமல் சொல்லவேண்டும். அதைக்கேட்டு ஒருவிதம் நான் நிச்சயம் செய்துகொள்வேனென்று சொன்னார். உடனே தேவதூதர்சொல்லுகிறார். ஓ முனிவரே ! நீர் பெரும்புத்தியுள்ளவாயினும் கைக்குக்கிட்டியதான உத்தமமான சுவர்க்கசுகத்தைப்பெரியதாகஎண்ணவேண்டியதாயிருக்கும்பொழுது அதைப்பற்றி விசாரிக்கதுடங்கினீரே, அந்தஉலகம் எல்லாவற்றிற்கும்மேலானது. ஸாதுக்கள் சேருமிடம். தபம் செய்யாதவருக்கும் யாகம் செய்யாதவருக்கும் நாஸ்திகர்களுக்கும் பொய் பேசுகிறவர்களுக்கும்கிடைக்காது தர்மசிந்தனையுள்ளவர்களும் இந்திரிய நிக்ரஹம் செய்தவர்களும் சாந்தகுணமுள்ளவர்களும், அஹங்காரமற்றவர்களும் அஸூயை இல்லாதவர்களும் தானம் தர்மம் இவைகளில் ஆசைகொண்டவர்களும், யுத்தம் செய்யும் சூரர்களும், அந்த லோகத்தையடைவார்கள். சித்தர்கள். சாத்தியர்கள், விசுவேதேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், கிம்புருஷர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், சாரணர்கள், இந்த தேவஜாதிகளுக்கு அவரவர்களுக்குத் தக்கபடி இஷ்டப்படி அனுபவிக்கக் கூடிய லோகங்கள் தேஜோமயமாகப் பிரகாசிக்கின்றன. முப்பத்தி முவ்வாயிரம் யோஜனை தூரமுள்ளதும் ஒரே தங்கமயமாயிருக்கும் மகாமேருபருவதம் அவ்விடத்திலிருக்கிறது. நந்தனம் என்கிற உத்யானவனமிருக்கிறது. பசி தாகம் இவைகள் ஏற்படாது. எப்பொழுதும் சுகந்தம் வீசிக்கொண்டேயிருக்கும். காதுக்கினிமையான பாட்டுகள் பாடுவார்கள். துக்கமும் கிழத்தனமும் கிடையாது. அவ்வுலகத்தையடைந்தவர்களின் தேகமானது தேஜோமயமாகவேயிருக்கும். அவ்விடத்தில் மாதாபிதாக்களின் ஸம்பந்தத்தினால் பிறப்பென்பது கிடையாது. கர்மங்களைச்செய்து வந்தவர்களேதேவர்கள் எனப்படுகிறது. வியர்வையுண்டாகாது. மூத்திரம் மலம் இவைகளும் கிடையாது. வஸ்திரங்களில் அழுக்கு ஏற்படாது. புஷ்பமாலைகளுக்கு வாட்டமும் கிடையாது. இந்த சுவர்க்கத்திற்கு மேல்மேலாகவும் உலகங்களிருக்கின்றன. கீழ் லோகத்தைவிடபன்மடங்கு அதிக குணமுடையனவாகவும் தானே பிரகாசிக்கின்றவைகளாகவும் இருக்கின்றன. தேவர்கள்கூட எந்தேவர்களைக்குறித்துயா

கம் செய்கிறார்களோ அப்படிப்பட்ட தேவர்கள் வஸிக்கின்ற லோகங்களவைகள். அவ்விடத்தில் ஸ்திரீ நிமித்தமான ஸந்தாபமில்லை. ஸம்பத்தின் விஷயமாக அஸூயையில்லை ஹோமம் முதலிய கர்மங்கள் செய்யவேண்டியதில்லை. நம்மைப் போன்ற தேகமில்லை. தனிமையாய் தேவசரீரமொன்று ஏற்படுகிறது. சுகத்தில் விருப்பமில்லாதவர்கள் ஜராமரணம் சுகம் துக்கம் சந்தோஷம் பிரீதி இவைகள் கிடையாது. பிரம்ம தேவனோடு முக்தியடைகிறவர்களுக்கு எந்தபுண்யகருமங்களால் அந்தலோகம்கிடைக்குமோ அத்தகைய புண்யகர்மங்கள் உன்னால் செய்யப் பட்டிருக்கின்றன. ஆகையால் அந்த உலகத்தை அடைந்து புண்யபலன்களை அனுபவியுங்கள். இது வரையில் அவ்வுலகத்திலுள்ள குணங்களைச் சொன்னேன். இனி தோஷங்களைக் கூறுகிறேன் கேளும்.

இங்கு செய்த கருமங்களின் பலனை அனுபவிப்பதற்காக அங்கு சென்றவர் பாக்கியன்றி யாவத்து பலனையும் அனுபவித்து விடுகிறார். வேறு கர்மங்களை இவ்விடம் செய்ய இடமில்லை. கொஞ்சமேனும் பாக்கியில்லையென்று ஏற்பட்டவுடன் பூமியில் விழுந்து விடுகிறார்கள். இது வரையில் சுகமாகயிருந்துவிட்டுகீழே விழுகிறதென்றால் இதைவிட வேறு துக்கம் வேண்டுமா! போட்டு கொண்டிருந்த ஹாரமானது எப்பொழுது வாட்டத்தை அடைகிறதோ அப்பொழுதே பதனம் வந்துவிட்டதென்று பரிதபிக்கிறார்கள். விழும்பொழுது பிரக்ஞை தவறி மோகமும் உண்டாகிறது.

आब्रह्मभवनादेते दोषा मौद्गल्य दारुणाः

பிரம்மலோகம் முதல்கொண்டு மேற்கூறிய தோஷங்கள் குரூரமாக காணப்படுகிறது. இவைகள் பெரியதோஷமென்றே என் அபிப்பிராயம். ஆனால் ஸ்வர்க்கத்திலிருந்து கீழே பதனமடைகிறவர்களுக்கு ஒரு நல்ல குணமிருக்கிறது. கர்மசேஷமிருந்து மோகம் இல்லாமல் பதனத்தை அடைகிறவன் மனுஷ்யனாகவே பிறந்து மகாபாக்யசாலியாயுமிருக்கிறான் என்பதுதான் விசேஷம், அப்படி பிரக்ஞையில்லாதவன் கீழ்பட்ட ஜந்துவாகப் பிறக்கின்றான். இவ்வுலகத்தில் செய்யும் கருமத்துக்கு அவ்வுலகில் தான் பலத்தின் அனுபவமேற்படுகிறது. ஆகையால் இவ்வுலகத்திற்கு கர்மபூமி என்றும், அவ்வுலகத்திற்குபோக பூமியென்றும் பெயர். ஓ முத்கலரே நீர் என்னைக் கேட்டதற்கு நான் சொல்லிவிட்டேன். இனி

தாமதிக்கவேண்டாம் விமானத்தில் ஏறும் என்று சொன்ன தேவதூதரைப்பார்த்து முத்கலர் கூறுகின்றார்.

एतच्छ्रुत्वातुमौद्गल्योवाक्यंविममृशेधिया ।
विमृश्य च मुनिश्रेष्ठो देवदूतमुवाचह ।
देवदूत नमस्तेऽस्तुगच्छताततयथा सुखम् ।
महादोषेण मे कार्यं न स्वर्गेणसुखेनवा ॥
पतनान्ते महद्दुःखं परितापः सुदारुणः ।
स्वर्गभाजश्चरन्तीह तस्मात्स्वर्गन्नकामये ॥
यत्रगत्वानशोचन्ति न व्यथन्तिचलन्ति च ।
तदहंस्थानमत्यन्तं मार्गयिष्यामिकेवलम् ॥

இதன்பொருள்- இந்த தேவதூதருடைய வாக்யத்தைக்கேட்டுத் தன் புத்தியினாலேயே விசாரித்துக்கொண்டு தேவதூதனைப்பார்த்து ஓ தேவதூதரே! உமக்குப் பெரியநகஸ்காரம். வந்தவழியைப் பார்த்துக்கொண்டு சுகமாக ஊருக்குப் போய்விடும். கடுமையான தோஷமுள்ள இந்த சுவர்க்க ஸுகத்தினால் எனக்குப் பிரயோஜனமில்லை. கீழேவிழுந்த பிறகும்கூட பரிதாபமேற்படுகிறது என்றால் சுவர்க்கத்தில் வாசம் செய்தவர்களே இங்கும் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதினால் இவ்வுலகத்துக்கும் அவ்வுலகத்துக்கும் ஓரேவிதமாகவே சுகத்துக்கங்கள் காணப்படுகின்றன. ஆகையால் எனக்கு சுவர்க்கலோகம் தேவையில்லை.

எந்த இடஞ்சென்றால் துக்கமேற்படாதோ பயமேர்ப்படாதோ சலிக்கமாட்டானோ அப்படிப்பட்ட விசேஷமற்ற ஒரு ஸ்தானத்தைத்தேடிக்கொண்டிருக்கிறேன்.

சொர்க்கலோகத்தில் நீர் சொல்லியபடி பெரியதோஷங்களிருக்கின்றன. அப்படி தோஷமற்றதாக வேறு ஏதாவது லோகமிருந்தால் அதைச் சொல்லும் என்று கேழ்க்க தேவதூதர் கூறுகிறார். பிரம்மலோகத்துக்கும் மேலான ஸர்வாத்மாவாய் சர்வவியாபகரான பரமாத்மாவினுடைய ஸ்தானமொன்றிருக்கிறது. சுத்ததேஜோ ரூபம் புராணமாயுமுள்ளது அதையே பிரம்மமென்பார்கள் அந்த இடத்துக்கு விஷயங்களிலாசையுள்ளவர்கள் போகமாட்டார்கள். தம்பம் லோபம் கோபம் துரோகம் இவைகளை அடைந்தவர்களும் அடையமாட்டார்கள். மமதையற்றவர்களும் அஹங்காரமற்றவர்களும், சுகதுக்கங்களை ஒன்றாக நினைப்பவர்க

களும் இந்திரியங்களை அடக்கியவர்களும் தியான யோக நிஷ்டையுள்ளவர்களும் அடைவார்கள்-என்று இவ்விதம் தேவதூதருடைய வசனத்தைக்கேட்டு அவரை ஊருக்குப்போகும்படிசெய்து பிறகு தனது தர்மத்தை தீவ்ரமாக அனுஷ்டித்துக்கொண்டு கடுமையான வைராக்யமடைந்து தியானயோகத்தைச்செய்து சாசுவதமான முக்தி நிலையை அடைந்தார் என்ற இந்த சரித்திரத்தினால் தேகம்முதலியவைகளில் ஏற்படும்மாயாமோகத்தைவிட்டு அதுயமனுக்குஸமானமாக இருப்பதால் மோகத்தை விலக்கிக்கொள்வதே மிருத்யுவைஜெயிப்பது என்பதாகநினைத்துமுத்கலருஷியைப்போல் சொர்க்கபோகத்தையும் விலக்கிக்கொள்ளவேண்டும். இதுவே தீவ்ர வைராக்யம். இந்த முக்யமான ஸாதனத்தினால் தான் முக்தி ஏற்படுகிறது என்கிற இந்த அர்த்தத்தையே முதல் சுலோகத்தினால் நமது ஆசாரியாள் அனுக்ரஹித்திருக்கிறார்கள்.

கச்சபேசுவரசாஸ்திரிகள்.

## வேண்டுகோள்.

ஆஸ்திகர்களே !

வரப்போகும் புதுவருடத்தின் பெயர் "प्रजोत्पत्ति" என்று வெகு காலமாக வழங்கி வந்துகொண்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம். அவ்வருடப்பலனும் "பிரஜோத்பத்தி" என்ற நாமத்தையே உறுதி செய்கிறது. இவ்விஷயத்தில் சிலபஞ்சாங்க கணித வித்வான்களின் அபிப்பிராயம் யாதெனில் பல சுருதியிலும் கீழ் நடப்பிலும் "प्रजोत्पत्ति" என்று புதுவருடத்துக்கு நாமமிருந்தாலும் சங்கல்பாதிகளில் "प्रजापतिनाम" சம்வத்ஸரமென்று சொல்லவேண்டுமென அபிப்பிராயப்பட்டு பஞ்சாங்கத்தில் அச்சிட்டு இருக்கிறார்கள். இந்த அபிப்பிராயமுள்ளவர்களே இப்போது நடந்துவரும் "பிரமோதூத" வருட பஞ்சாங்கக் கடைசியில் "பிரஜோத்பத்தி" என்று அச்சிட்டும் இருக்கிறாகள். இதன் உண்மையைத் தெரிய "ஹரிஹரபக்த" சமூகம் ஆவல் கொண்டிருக்கிறது. ஆகையால் வித்வான்கள் இவ்விஷயத்தில் தக்கதான சமாதானத்துடன் புதுவருடப் பெயரின் தத்வஸாரத்தையும் வேறு விசேடங்களையும் "ஆரியதர்மம்" மூலமாய் வெளியிடவேண்டும் என்று இப்பக்த சமூகம் கேட்டுக்கொள்கிறது.

K. V. வீரமணிவாத்யார்.

## உபந்யாஸச் சுருக்கம்.

கொட்டாரக்கரை "ஹரிஹரபக்த" சமூகத்தில் நடந்த "ஸ்ரீராமபஜனை" காலத்தில் தர்மாக்ஷணார்த்தமாக சங்கராமசாஸ்திரிகளால் செய்யப்பட்ட ஓர் உபன்யாசச்சுருக்கத்தை நமது ஆர்ய தர்மம் மூலமாகவே வெளியிடவேண்டுமெனச் சபையின் அபிப்பிராயத்தை ஆதரித்து வரைகிறோம்.

स्मरन्तिये यत्रतत्रमां विपत्तौ भयान्विताः ।
तांस्तत्रगत्वारक्षामिचक्रहस्तस्त्वरान्वितः ॥

எவ்விடத்தில் எவர்கள் ஆபத்தில் பயத்துடன் என்னை ஸ்மரிக்கிறார்களோ, அவ்விடத்தில் நான் சக்ராயுதபாணியாய் வெகு சீக்கிரமாகச் சென்று அவர்களை ரக்ஷிக்கிறேன்" என்றார் பகவான். இவ்வுபதேசம் மிக அனுபவமுள்ளதென்பது சித்தம். பகவான் "ஆபத்பாந்தவன்" என்ற நாம விசேடத்தை "பிரக்லாதன், கஜேந்திரன், திரௌபதி முதலான பக்த சிகாமணிகளின் விஷயத்தில் நன்கு காண்பவித்திருக்கிறார். சந்தோஷகாலத்தில்சஹாயம்செய்யபந்துக்கள்சுலபமாய் வருவார்கள். ஆனால் ஆபத்துக்காலத்திலோவெனில் "ஆபத்பாந்தவனான" பகவானைத்தவிர வேறுபந்துக்கள் வரமாட்டார்கள் என்பது அனுபவவிஷயமும், இந்துக்களின் பூர்ணவிசுவாச காரியமுமாம்.

தற்காலம் சனாதன இந்து மதத்திற்கு வந்திருக்கும் இடையூறுகள்பலவாம். பற்பல ஆபத்தையடைந்த பக்தர்களைகாப்பாற்றி ரக்ஷித்த பகவான் இந்துமத ஆபத்தையும் விலக்கி ரக்ஷிக்க ஸித்தனாக இருக்கிறார் என்பது உண்மை. அவாப்தசமஸ்தகாமனாகிய பகவானை முன் நிறுத்தி முயர்ச்சிப்போமாகில் எவ்வித ஆபத்தையும் ஜயிக்கலாம். இந்து மதத்திற்கு வந்து சேர்ந்திருக்கும் இடையூறுகள் யாவையெனில்:— இந்தியா சட்டசபை மெம்பராகிய "ஹரிசிங்கோர்" என்பவர் இந்தியர்களை வெள்ளையர்களாக்கத் தற்காலம் மிகப்பிரயத்னம் செய்துவருகிறார். ஒவ்வொரு விவாஹத்தையும் ரிஜிஸ்தர் செய்யவேண்டும். ஒரு மனைவிக்கு மேல் விவாஹம் செய்துகொள்ளக் கூடாது. எந்த ஜாதியிலும் விவாஹம் செய்துகொள்ளலாம். இதை மீறி நடந்தால் சிக்ஷை என்றொரு சட்டத்தை சமீபகாலத்தில் கொண்டுவந்தார். சட்டமெம்பர் 'அழகாய் பதில்கூறி இதைக்கண்டித்தார்.

எதிர்கக்ஷி பலக்கவே "கோர்" வாபீஸ் வாங்கிக்கொண்டு பின் செல்லவே சபையோர்கள் இவரை நிறுத்திவைத்து ஓட்டுக்களால் இவரது கொள்கையை நசிக்கச் செய்தனர். இருந்தாலும் மத விஷயத்தில் இன்னும் இவர் தலையிடாமல் இருக்கவில்லை.

இவர் இந்தியாசட்ட சபையில் புருஷன் நபும்சகனாகவோ, வீரியமற்றவனாகவோ, குஷ்டரோகியாகவோ, இருந்தால் இவரை கல்லியாணம் செய்துகொண்ட பெண்கள் வேறு விவாகம்செய்து கொள்ளலாமென புதிதான சட்டமொன்று கொண்டுவரப்போகிறார். இவர் கல்யாணம் போகசுகத்திற்காகவே ஏற்பட்டிருக்கிறது என்று நம்பிக்கையுடையவர். அசாஸ்திரமும் மூலபலமில்லாததும் ஆன இந்த சட்டத்தைத்தடுக்க இச்சமயம் நாம் முன்னின்று முயற்சிக்க வேண்டும்.

'கோர்' என்பவரும் 'சாரதா'வும் சட்டபையிலுள்ளவரையில் மதாபிமானிகள் கவலையற்று கர்மானுஷ்டானம் செய்துவர சாத்யமில்லாததுபோல் இருக்கிறது. 17உ இந்தியாசட்டசபையில் இவ்விருவர்களும் இரண்டு சட்டங்களுக்கு அனுமதிபெற்றனர். அதாவது 15-வயதுக்குள் பெண்களுக்கு நிஷேகமானல் சிக்ஷை. விதவைகளுக்கு சொத்துரிமை வேண்டும் என்பவைகளாம், இவைகளால் வரும் துன்பம் கொஞ்சமல்ல. நாம் இவைகளை அகற்ற மதவிஷயத்தில் தர்ம விருத்தமான சட்டங்களை சட்டசபையில் ஒருபோதும் கொண்டுவரக் கூடாது. மதவிஷயமாய் செய்யவேண்டிய அவசியமான சீர்திருத்தங்கள் மதாசாரியாளைப் பொருத்ததாகுமே தவிர மதவிசுவாசம், மதரகசியம், இவைகளைச் சிறிதும் தெரியாத லௌகிக பிரசித்தமான சட்டசபைக்கு இதில் தலையை இடயாதொரு அவகாசமுமில்லைஎன்பதுஈசன்வகுத்திருக்கும்முன் சட்டமாம். ஈசனதுஆக்ஞையைவிலக்க சாரமற்றபுதுசட்டம்இந்து மதாபிமானிகளுக்கு ஒருக்காலும் தேவையில்லை என்பதுசத்தியம்.

தற்சமயம் "ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியர்" சாரதாசட்டத்திலிருந்து பிராமணர்களைப் பிரித்துவிட ஓர் பில்லை தயார் செய்து "டில்லி சட்டசபையில் கொண்டுவருகிறார். அதற்கு நமது சகாயத்தை இச்சமயம் எதிர்பார்த்திருக்கிறார். பல ஸ்தலங்களிலும் இச்சமயம் சபைகள்கூடி இவரை ஆதரிக்க நாம் விடா முயற்சி செய்துவரவேண்டும். இம்முயற்சிக்கு மதாபிமானமே ஆணிவேராகும்.

16-ம்தேதி "டில்லியில் இந்தியா சட்டசபை அங்கத்தவரான ஓர் மகம்மதியரின் அத்தியட்சத்தில் ஓர் பெருங்கூட்டம் கூடி தங்கள் ஜாதியினத்தை "சாரதா" சட்டத்திலிருந்து விலக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். மகம்மதியர்களின் விடாமுயற்சியும், மதாபிமானமும் எவ்வளவுதீவிரமாக இருக்கிறது பாருங்கள்! மதாபிமானிகளே! எவ்வித முயற்சியும்ஈசனையே துணையாகக்கொண்டு முயற்சிக்கும்மதம் நம் "சனாதனமதமாம்". இம்மதவிருட்சத்தின் ஆணிவேர் இன்னதென்று அறியாத சில மேதாவிகள் பலவழியாக மதவிருட்சத்தை வெட்டி முறித்துவிடலாமென்று மனப்பால் குடித்து முயன்றுவருகிறார்கள். இவ்விருக்ஷத்துக்கு ஆணிவேர் "ஈசன்" என்பதை இனியாவது அறிவார்களா?

सूत्रेमणिगणाइव என்று பகவான் உபதேசித்திருப்பதுபோல இவர்கள் துராசாரக் கயற்றில் உலகஜனங்களையே பந்திக்கக்கருதி துராசாரத்தை கவர்ன்மெண்ட்டு சட்டமாக்கி அதில் இவர்களை பந்திக்க மோஹங்கொண்டு, கங்கணம்கட்டி முயற்சித்துவரும் இவர்களின் மனோதைரியம்தான் என்ன? சட்டமானஎத்தனையோ காரியங்கள் நடப்பிலில்லாததை ஏன் அறியவில்லை? பிரகிருதிநியமமாய் கிடைத்திருக்கும் சுவாதந்திரிய சக்தியை ஒருசிறு சட்டவரம்பில் நிறுத்திவைக்க முயற்சிப்பது ஈசனைவெல்ல எண்ணுவதற்கு ஒப்பாகும். அக்காலம் மலையேறிவிட்டது. ஸனாதனதர்மிகள் விழித்துக்கொண்டு விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொள்வார்களாக.

முற்காலத்தில் "வேனன் ஹிரண்ணியன்" முதலிய ராஜாக்களின் காலத்தும், புத்தமுனியின் காலத்திலும், மகம்மதியராஜ்ஜியகாலத்திலும் இருந்துவந்த துராசாரங்களைவிட, இச்சமயம் வந்து குடியிருக்கும் துராசாரங்கள் பெரிதல்ல. அக்காலத்திலும் சனாதனமதம் நசிக்காமல் நின்றிருக்கின்றதென நன்கு அறிந்த விஷயம். இந்த மகிமைக்குக்காரணம் என்ன? ஈசன் கிருபையேயாகும்.

மதமென்பதே அறியாத சில துராசாரமனிதர்கள், ஹிந்துமதமே கெட்டுப்போய்விட்டது என்று புகார் செய்துகொண்டு ஜனங்களைத் துராசாரத்தில் இழுக்கிறார்கள். இதனால் இந்து சனாதன மதத்தின் ஆணிவேரான ஈசனருளை இழுக்க இவர்கள் சக்த

ரகமாட்டார்கள். இம்மதத்திலிருந்து எவ்வளவு மனிதர்கள் வெளியேறினாலும், வந்துசேர்ந்தாலும் சனாதனமதத்திற்கு யாதொரு குறைவுமில்லை. சமுத்திரத்தில் எவ்வளவோ நதிகளும் ஓடைகளும் வந்து சேர்ந்தாலும் சமுத்திரஜலம் தன் நிலைமை மாறுவதில்லை என்பதுபோல சனாதனமதமும் ஜனத்தொகையை நம்பி நிற்கவில்லை என்பதையும், ஈசனருளால் நிற்கின்றன என்பதையும், நான் பன்முறை எடுத்துரைத்து வேண்டிக் கொள்ளுகிறேன். இதற்கு இவ்வூர் புராண சரிதம் சிறிது எடுத்துரைக்க ஆவல்கொள்கிறேன். இதிலிருந்து மதநிலைமைக்குக் காரணம் இன்னதென்று பாமரர்களும் அறிந்துகொள்ளக்கூடும்.

(தொடரும்) K. V. வீரமணிவாத்யார்.
கொட்டாரக்கரை.

# கோபக்கொடுமை, அல்லது திரிபு.

19—3—31-ல் பிரசுரமான ஆர்யதர்மப் பத்திரிகையில் T. N. சுப்பிரமணியசாஸ்திரி என்று கையெழுத்திட்டு ஒருவர் ஓர் அறிவிப்பை அறிவித்திருக்கிறார். அதில் என்னைப்பற்றி முதலில் பிரஸ்தாபித்திருப்பதால் இந்தக்கடிதம் நான் எழுதநேரிட்டது. "அத்வைதம் அவைதிகம்" என்று ஸ்ரீ உத்திராதிமடம் பீடாதிபதிகள் சொன்னதாக நினைத்து மனம் புண்பட்ட சில அத்வைதி லௌகிகர்களும், வைதிகர்களும், ஸ்ரீமதஸ்தர்களும் நிறைந்த ஸபையில் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கவே, ஸ்ரீ ஸ்வாமிகள் இவ்வாறு கூறினார்கள் என்று நான் சில விஷயங்களை ஷை சுவாமிகள் கூறியவாறு எழுதினேன். இந்த விஷயத்தை ஸபையில் கொண்டுவந்து வருத்தத்துடன் பேசின ப்ரம்மஸ்ரீ ஜகதீச்வரசாஸ்திரிகளும், அட்வகேட் குருசாமி சர்மா அவர்களும், ஸ்ரீ ஸ்வாமிகளுடைய பதிலைக்கேட்டவுடன் தாங்கள் திருப்தி அடைந்ததாக ஷை ஸபையிலேயே பலருடைய முன்பில் சொன்னார்கள். நான் பலருடையவும் முகக்குறியைக் கண்டு பலரும் திருப்தியடைந்ததாகவே எண்ணினேன். நமது T. N. சுப்பிரமணிய சாஸ்திரியாருடைய முகக்குறியை நான் அறியவில்லை. இவர் அன்று வந்திருந்தாரோ, என்னவோ? இவர் யார் என்று எனக்கு இப்பொழுது கூடத்தெரியாது.

நடந்த விஷயம் இவ்வாறிருக்க, நமது சாஸ்திரியார், ஷை ஸ்வாமிகள் ஷை விஷயங்களை என்னிடம் தனிமையில் சொன்னதாக நான் எழுதியிருப்பதாய் முதன்முதல் நினைத்துக்கொண்டு விட்டார். சாஸ்திரியார் தமது கோபாவேசத்தில் ஆரியதர்மத்திலெழுதியிருப்பதை உள்ளபடி பார்க்கக்கூடத் தவறிவிட்டார். "கோபத்தால்கலங்கினபுத்திகர்த்தவ்யாகர்த்தவ்யங்களை ஆராய்ந்து பாராது" (न हि कोपकलुषिता विमृशति मतिः कर्तव्यमकर्तव्यं वा) என்ற பாண பட்டருடைய உபதேசம் இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது.

"அத்வைதிகள் வருந்துமாறு ஸ்வாமிகள் ஒன்றும் கூறிவிடவில்லை என ஸமாஸப் படுத்துகிறார்கள்" என்று என்னைப் பற்றி சாஸ்திரியார் எழுதுகிறார். "அத்வைதிகள் வருந்துமாறு ஸ்வாமிகள் ஒன்றும் கூறிவிடவில்லை" என்று நான் என்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டதாக எனது நண்பர் எழுதுவதற்கு என்னுடைய கடிதத்தில் ஏதாவது அறிகுறி உண்டா? சாஸ்திரியாருடைய மனம்மிகவும் கலங்கி, வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் பளீர் என்று தெரியுமாறு அச்சடிக்கப்பட்ட வாக்கியங்களைக் கூட நிதானத்துடன் படிக்க இடமில்லாமல் போய்விட்டது.

ஸாதாரணமான காரியங்களில்போலும் கொஞ்சமாவது அறிவுள்ள மனிதன் ஸமாஸப்படுத்த முயல்வதுதான் மானிட தர்மம் என்பதை நம் சாஸ்திரியார் அறிந்திருந்தால் ஸமாஸப் படுத்த முயல்வதை என்மீது பெரிய குற்றமாகக் காட்டப் புறப்படமாட்டார். உண்மையில் நமது சாஸ்திரியாரைப்போன்றவர்கள் ஸமாஸப்படுவதில் எனக்கு பெரியலாபமோ? அல்லது முரண்படுவதில் பெரிய கஷ்டமோ ஏற்படமாட்டாது என்பதை என் நண்பர் சாஸ்திரியாரே ஒரு ஸமயம் ஒப்புக்கொள்ளக்கூடுமென்றே நினைக்கிறேன்.

'மேலும் அத்வைதிகளின் சார்பாக தத்வவிசாரம் செய்யவே ஸ்வாமிகள் விரும்புகிறாரெனக் கூறுகிறார்கள்" என்று சாஸ்திரியார் எழுதுகிறார். ஸ்வாமிகளுடைய வாய்மொழி என்று வெளியிடப்பட்ட என் லேகனத்தைச் சாஸ்திரியார் பார்த்திருந்தும், எல்லாவற்றையும் நான் என்னுடைய அபிப்பிராயமாகக் கூறியதுபோல் காட்டவிரும்புகிறார். கோபத்தால் மழுங்

கும் புத்தியும் பார்வையும் இவ்வளவுதூரம் தடுமாற்றமுறுமா? அத்வைத வேதாந்திகள் சொல்லும் அத்தியாரோபாபவாத अध्यारोपापवादन्याय ந்யாயம் இவர்க்கு அனுபவத்தில் வந்துவிட்டதாகவே நான் நினைக்கிறேன்.

இதற்குமேல் "தத்வவிசாரம் விஷயத்தெரிந்துகொள்ளவா" என்றுதொடங்கித் தன் மனத்திலுள்ளவற்றை எல்லாம் சாஸ்திரியார் வெளியிட்டிருக்கிறார். இவ்விஷயத்தில் நான் தலையிட விரும்பவில்லை, எனக்கு ஆவசியகதையுமில்லை. இவ்விஷயங்கள் பலவும் ஸபை நடுவில் ஷை ஸ்வாமிகளின் முன்பில் ப்ரம்மஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகளால் வெளியிடப்பட்டனவே. ஸ்ரீயஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் சொல்லிய இந்த விஷயங்களைக்கேட்டுக் கொண்டிருந்த நமது T. N. சுப்பிரமணிய சாஸ்திரியார் உடனே ஆர்யதர்மத்திற்கு எழுத நினைத்து ஸபையிலிருந்து எழுந்துபோயிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். இல்லாவிடில், ஷை மடாதிபதிகள், முன்னொருநாள் கூறியவற்றையே அன்றும் கூற, அதைக்கேட்டுத் திருப்தியடைந்ததாகச் சொல்லி, விசாரம் ஆரம்பிக்கலாம் என்று அனுமதிகொடுத்த ப்ரம்மஸ்ரீ யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் முதலான மஹாவித்துவான்களையும், ப்ரம்மஸ்ரீ ஸுந்திராமய்யர் அவர்கள் முதலிய லௌகிக வைதிக பண்டிதர்களையும் ஒருவாறு தாக்காமல் நமதுசுப்பிரமணியசாஸ்திரியார் லேசாக விட்டிருக்கமாட்டார்.

"இதனால் உண்டாகும் அவமதிப்பு அத்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்குமொன்றே" என்று எழுதி நமது சாஸ்திரியார் விசிஷ்டாத்வைதிகளைக் கிளப்பவோ, அல்லது விசிஷ்டாத்வைதியான என்னை இடித்துக்கூறவோ முயலுகிறார். விசிஷ்டாத்வைதிகள் போர்தொடுக்கக் கிளம்புவதில் எனக்கு ஆக்ஷேபம் கிடையாது. என்னைப்பற்றினவரையில் நான் சொல்லக்கூடியவை எவையென்றால்— "விசிஷ்டாத்வைதம் அவைதிகம்" என்று ஒருவர் சொன்னால் எனக்குக் கடும்கோபம் உண்டாகும். அவைதிக பதத்திற்கு ஷை ஸ்வாமிகள் கூறியபடி அர்த்தம் செய்வதானால் கோபம்நீங்கி வாதத்திற்குப் புறப்பட நினைப்பேன். அப்பொழுது அடியிற்காணும் கேள்விகளை நானேமனத்தில் கேட்டுக்கொள்வேன்—"நமக்கு வாதம் புரிய சக்தி இருக்கி

றதா? அவ்வப்பொழுது ப்ரமாணமாகக்காட்ட நமது விசிஷ்டாத் வைதவேதாந்தக்ரந்தங்கள் எல்லாம் ஞாபகத்தில் வருமாறு பல மானபயிற்சியும் ஆராய்ச்சியும் நமக்கு இருக்கின்றனவா! பண்டிதர்களும் லௌகிகர்களும் விசிஷ்டாத்வைத மடாதிபதிகளும் எவ்வளவு தூரம் நமக்குப்பக்கபலமாக நிற்பார்கள். என்பனபோன்ற பல கேள்விகளையும் என்னொடு நானே ஒருதடவைக்குப் பலதடவையாகக் கேட்டுக்கொண்டு இவற்றிற்குத் தக்க திருப்திதரக் கூடிய ஸமாதானங்கள் என்மனதிற்குப் புலப்பட்டுவிட்டால் உடனே ஒரு நிமிஷம்கூட விளம்பம் செய்யாமல் வாதயுத்தத்திற்குப் புறப்பட்டுவிடுவேன். இதன்றி 'நீர் விசிஷ்டாத்வைதம் குருமுகமாகப் படித்தீரா? நீர்தோற்றால் என்மதத்தில் சேருவீரா? என்று பிரதிவாதியைப்பேச புறப்படமாட்டேன்.

மேற்கூறிய ஸௌகரியங்கள்இல்லாவிடில், வீண்வம்புப்பேச்சையும், டம்பவார்த்தையையும் விட்டுவிட்டு அடங்கியிருப்பேன்.

பண்டிட் R. V. கிருஷ்ணமாசாரியர்.

---

# வார விருத்தாந்தம்.

காரணம் யாதோ. மதுரையில் ஓர் நண்பர் சாரதாசட்டத்தை எதிர்த்து வியாஜ்யம் தொடுத்திருந்தார். அது அவரைப்பற்றியது மாத்திரமல்ல. ஸகல மதாபிமானிகளுக்கும் சொந்தமானது. வைதிகர்களும் அவைதிகர்களும் ஆவலுடன் இதன் முடிவை எதிர்பார்த்திருந்தனர். நமக்கே விரோதமாக முடியுமென நிச்சயமாக அறிந்திருந்தாலன்றி திடீரென இதை இவர் வாபீஸ் வாங்கிக்கொண்டது நியாயமல்ல. யாது காரணமோ நாம் அறியோம்.

காரணத்தை மறக்காதீர். தக்ஷிணதேசத்து பிருஹச்சரண வகுப்பைச்சேர்ந்த ஸர் ஸி வெங்கடராமன் என்றவிக்ஞாநீநோபில் என்ற வெகுமதியை மேனாடுசென்று தன்விக்ஞாநசாஸ்திர ஆராய்ச்சியின் பயனாகப் பெற்றுவந்தார். நம்மவர் உடனே கண்திறந்து ஊர்ஊராக உபசாரம் செய்கின்றனர். சென்னை நகரபரிபாலன ஸபையார் செய்தபோது 18௳ உபசாரபதில் உபன்யாஸத்தில் இம் மாகாணத்தவர் அறிவைப் புகழ்ந்தார் ராமன். மூன்று மதாசார்யர்களுமிங்கு தோன்றி வேதசாஸ்திரஸதாசாரங்களை அநுஷ்டிக்

கும்படி செய்ததாலும் கோத்ரரிஷிகளின் ரக்தவேகம் நம்முடலில் தங்குவதற்கேற்க ஸதாசாரத்தால் நம்முடலை நாம் பண்படுத்தியதுமே அதற்குக்காரணமென்பதை இக்காலத்தவர் உணர்வதில்லை. நாமும் நமது மக்களும் இவ்வாசாரங்களைக் கைவிடின் இஹமும் பரமும் கெடும் என உணர்வாராக.

பாத்திரமறிந்து கோடு. செம்படவனுக்குச் செய்யுந்தானம் மீன்களுக்கு ஆபத்தாய் முடிகிறது. நாம் கொடுக்கும் தானம் நல் வழியில் பயன்படுகிறதா என்பதை உணரவேண்டும். 17வ நிஜாம் மன்னர் 200000 ரூபாய், அவரைப்போன்ற சிலர் சில ஆயிரம் ரூபாய்களையும் ராஜப்ரதிநிதியின் மனைவிபேரால் ஏற்படும் பெண் மக்கள் கலாசாலைக்குக் கொடுத்தார்கள். ஒருவர் பிரீதிக்காக அளித்ததாயினும் தானம்செய்தவரையில் அவரைச்சிலாகிக்கவேண்டியதுதான். ஆயினும் மேனாட்டுக்கல்வி எனும் பெயரால் அத்தேசதுராசாரங்களைப்புகட்டி சுத்த பாதிவ்ருத்யம் நிறைந்த பாரத நாட்டு வாழ்க்கையைக் கெடுக்க இத் தநம் உதவுமாயின் அபாத்ர தானமென்றுதான் கூறவேண்டும்.

இவளன்றோ உத்தமி. தஞ்ஜைஜில்லாவைச்சார்ந்த ஓர் பத்தர் பலமாதகாலம் பணந்தேட தேசாந்தரம் சென்று திரும்பிவந்தார். தன் மனைவியின் சாரித்ரத்தில் ஸந்தேஹங்கொண்டு புருஷன் அவளைக் கத்தியால் குத்திக்கொன்றான். ஆஸ்பத்திரியில் இறக்கும் போது அவள் தன் கணவனுக்குத் தூக்குதண்டனை விதிக்கப் போகிறார்களே என்றஞ்சி தன்னைக் குத்தும்போது அவர் சித்த ஸ்வாதீநமில்லாமலிருந்தார்எனக்கூறி இறந்தாள். இவள் சொன்ன இச்சொல்லிலிருந்தே அவள் ஸந்தேஹிக்கத்தக்கவளில்லை எனத் தோன்றுகிறது. உண்மையைக் கடவுளே அறிவர். எப்படியாயினும் அவனது செயல் நல்லதல்ல என்பதோடு அவளதுஉயர்ந்த குணத்தைக் கொண்டாடாமலிருக்கமுடியாது. அவள் சொல்லால் அவன் தப்பினான். தன்னுயிரைவிட கணவன் மேலானவன் என நினைப்பது நம்நாட்டு தர்மம். மேனாட்டுமுறையில் மோஹங்கொண்டோர் இதைக் கவனிப்பாராக.

பசுந்தோல் புலி. இக்காலத்தில் அதர்மத்திற்கு தர்மமெருகு கொடுக்கப்படுகிறது. ஓர் மனைவி ஒரு நாவல் எழுத அதை அவள் கணவன் பிரசுரிக்க தேசியபத்ரிகை அதற்கு அழகாக மதிப்புரை

எழுதுகிறது. கதையின் போக்கு ஓர் கட்டழகி ஓர் காதலனை நேசித்தாளாம். அவள் தந்தை தாய் அவளை அன்யனுக்குக் கொடுத்து கல்யாணம் செய்துவிட்டார்களாம். இவ்வழகி கல்யாணம் செய்துகொண்டவனை ஸஹோதரன்போல் பழகெனக்கூறி அப்படியே பலநாள் வாழ்ந்து அவள் ஆக்ஞையின்படி ஆசைக் கணவனைத் திரும்பப்பெற்றுளாம். பாதிவ்ரத்யத்திற்கு பங்கமில்லாமல் தற்கால காதல் விவாஹம் நடந்ததாக கற்பிக்கப்படுகிறது. இதன் முடிவு பசுந்தோலை கிழித்தெரிந்து புலிபுலியாகவே வெளிவர அதிககாளாகாது என்பதே.

துராசார ப்ரசாரம். பாதிரிமார்கள் கலாசாலை வைத்யசாலை வாசகசாலை முதலியவைகளைவைத்து தனது மதப்ராசாரம்செய்வது போல் நமது மதத்தைக் குலைக்கும் துராசாரங்கள் நாவல் ஸினிமா தேக்கச்சேரி தேசஸேவை முதலியவைகளால் பிரசாரம் செய்யப்படுகின்றன. ஆதலால் பெற்றோர் தங்கள் குழந்தைகளை விசேஷமாகப் பெண்களை அஸந்தர்ப்பமான நாவல்களைப் படிக்காதபடி செய்வதுடன் பக்தி பாதிவ்ரத்யம் முதலிய தர்மங்களைப் புகட்டும் சரிதங்களைப் படிக்கும்படி செய்யவேண்டும். மற்றவைகளில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

வழி தேடவேண்டும். ஹிந்து மஹம்மதியசண்டை திநேதிநே பலத்துவருகிறது. வேண்டுமென்றே ஓர் மஹம்மதியர் பசுமாம்ஸத்தை இந்தியரிடம்கொடுத்ததால் லக்ஷ்மணபுரிக்கருகில் சென்றவாரம் சண்டை. ஹோலிப்பண்டிகைக்காகமசூதிமுன் ஹிந்துக்கள் வாத்யத்துடன் சென்றதால் ஆக்ராவில் பெருங்கலகம். இருமதத்தலைவர்களும் ஒன்றுசேர்ந்து மசூதியில் தொழுகை நடக்கும் குறிப்பிட்ட காலத்தில் வாத்யகோஷம் கூடாது. மற்ற ஸமயத்தில் இவர்கள் வாத்யத்தைத் தடுக்கக்கூடாதென ஓர் வியவஸ்தை செய்யவேண்டும். இல்லையேல் போராபத்தாக முடியும்.

முளையிலே கிள்ளவேண்டும். பழய மந்திரி ஒருவர் மதஸ்தாபநங்களைச் சீர்திருத்துவதாகக்கூறி கோவில்களுக்கு அரசாங்கம் பணம் கொடுப்பதுபோக கோவிலைத்தங்களுக்குப் பணம் கொடுக்கும்படி சொன்னார். தற்காலமந்திரியோ கோவில்கள் பணம் கொடாவிடில் கோர்ட்போகவேண்டியிருக்கிறதாம். ஆதலால் ரெவின்யூபோல் விரி கட்டாவிடில் கோவில் சொத்தை ஏலம் போட வேறோர் சட்டம் கொண்டுவருகிறார். சட்டஸபை அங்கத்

தினரும் பொதுஜனங்களும் இதை முத்தவிடாமல் ஆரம்பத்தி லேயே அடக்கவேண்டும்.

பயன் உண்டோ? சென்ற சில நாளாக 'அவைதிகம்' என்ற ஓர் சொல் ஆஸ்திகஉலகில் ஓர் பரபரப்பைஉண்டுபண்ணிவருகிறது. தந்தி பறக்கிறது, பண்டிதகோஷ்டி வாதம் புரிகிறது, நாஸ்திகர் உள்ளம் மலர்கிறது, சீர்திருத்தக்கார உலகம் நகைக்கிறது. எவர் ஜயித்தாலும் எவர் தோற்றாலும் உண்மையாக ஜயாபஜயத்தை அங்கீகரிக்கும் காலமில்லை இது. இருவரும் எனக்குதான் ஜயம் என்பர். அத்வைதிகளே வாதத்தில் தோற்றாலும் சுத்தாத்வைத ஸித்தாந்தம் மாசற்றது, தோல்வியுராதது, நான் ஜயிக்கவேண்டு மென வாதம் த்வைதப்ரபஞ்சத்தில்தான் நடக்கிறது. அதிகார புருஷர்களான ஆசார்யாள் அத்வைதத்தை ஸ்தாபித்ததுபோல் வேறெவராலும் எக்காலத்தும்செய்யமுடியாது. பெரியோர் கூடிச் செய்யுமிக்கார்யத்தில் ஸர்வஜநஸாதாரணமானபயனிருக்கவேண்டு மென்பதே நம் பிரார்த்தனை. சாரதாசட்டம் ஒழியுமா? சட்டம் இனி மதத்தில் தலையிடாதா? இனி த்விஜர் குறைந்தபக்ஷம் ஸ்நாந ஸந்தி சிகை ஆடை இவைகளையாவது ஒழுங்காக கவனிப்பரா? என்பதே நமது ஆசை.

இப்போதாவது எழுந்திருங்கள். மனிதராகத் தோன்றியவரில் ஜாதி ஸபைக்கூட்டாதவரில்லை. தம்மினத்திற்கு இது வேண்டும், அது வேண்டுமென்பதே எல்லார் நோக்கமும். எல்லோரும் சுக மாயிருக்கவேண்டும் என்பதற்காக ஓர் ஜாதி கடவுளால் படைக்கப் பட்டு இன்னதென அதற்குகடமையும் விதிக்கப்பட்டுளது. அதை மறந்து எல்லோராலும் ஸமீபத்தில் சர்சில் எனும் பார்லிமெண்ட் அங்கத்தவராலும் நிந்திக்கப்பட்டதும் இந்த வண்ணமே சென்ற சில வர்ஷமாக பேருக்கு இவர்களும் ஸபை நடத்துகின்றனர். இதே ஸமீபத்தில் மன்னார்குடியில் கூடிய பிராமணஸபை. இதன் மாகாணசபை நிர்வாக அங்கத்தினர் என்ற முறையில் வருஷச் சந்தா நாலணாவிதித்து ஊரூராய் ஸபை ஏற்படுத்த அடியேன் வேண்டியும் இப்போதுதான் அத்தீர்மானம் நிறைவேறியது. அதைப்படித்து ஸமீபத்தில் மததர்மத்தை அடித்துச்செல்லவரும் ஸ்வராஜ்ய வெள்ளத்திற்கு அணைகோலுங்கள்.

ஸ்ரீவத்ஸ. வே. சோமதேவ சர்மா.